

பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## கர்த்தரே
## மகா தேவனும்,
## எல்லா தேவர்களுக்கும்
## மகாராஜனுமாயிருக்கிறார்.

சங்கீதம் 95:3

செய்தி மலர்
2015
ஜூலை

இதழ் : 2
மலர் : 16



# தலைவர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

தேவ னுடைய பெரிதான கிருபையால் 2015–ம் வருடத்தில் 7வது மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம்.

கடந்த மாதத்தில் நடந்த சபை ஆராதனைகள், சபை ஊழியங்கள்,மற்றும் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவ பிரசன்னமும், வழிநடத்துதலும் இருந்தபடியால் அவருக்கு மகிமை செலுத்துவோம்.

இந்த 2015ம் வருடத்தை துவக்கி, நமக்கு வாக்குத்தத்தம் பண்ணினவர், இந்த 6 மாத காலமும் வாக்குதத்தத்தில் மாறாதவராய் நம்மை ஆசீர்வதிக்கிறார். அது மாத்திரமல்ல மாறாதவராய் நாம் சொல்லுகிறபடியே நம்மோடே இருக்கிறார்.

இந்த மாதம் சொல்லுவோம் "கர்த்தரே மகா தேவனும் எல்லா தேவர்களுக்கும் மகா தேவனுமாயிருக்கிறார் – சங் 95:3

அதுமாத்திரமல்ல அவர் நம்மடைய தேவன் நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைகுள்ளான ஆடுகளுமாமே – சங் 95:7

பிரியமானவர்களே கர்த்தரும் மகாதேவன் என்றல்ல, அப்படியென்றால் எத்தனையோ தேவன் உண்டு அதில் இவரும் ஒருவர் என்று அர்த்தம்.

**கர்த்தரே மகா தேவன்:** அவர் ஒருவரே மகா தேவன், அவர் ஒருவரே மகா ராஜா, ஆனபடியால் பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது, பர்வதங்களும், அவர்களின் உயரங்களும் அவருடையது, அவ்வளவு பெரிய தேவன் நம் தேவன். பெரிய பர்வதமும் பூமியின் ஆழங்களும், சமுத்திரமும் அவர் கையில் இருக்கிறது என்றால், நாம் எங்கு இருக்கிறோம். நாமும் அவர் கையில் இருக்கிறோம். நாம் மாத்திரமல்ல,நம்மடைய காலங்களும் அவர் கரத்தில்தான் இருக்கிறது. (சங் 31:15) ஆனபடியால் அவருடைய சித்தமல்லாமல், யாரும் நம்மை தொடமுடியாது, எதுவும் நடப்பது இல்லை. "நாம் அவர் கைகுள்ளான ஆடுகள்" (சங் 95:7)

"என் கையில் இருந்து ஒருவனும் அவைகளை பரித்துக் கொள்வதில்லை" யோ 10:28

அந்த கரம் நமக்காய் கல்வாரி சிலுவையில் ஆணிகள் கடவப்பட்டது அதிலிருந்து சிந்திய இரத்தம், நம்முடைய பாவங்கள், அக்கிரமங்கள், சாபங்கள், வியாதிகளுக்காய் சிந்தப்பட்டிருக்கிறது அதை விசுவாசிக்கும் போது, நாம்

அந்த கையில்தான் இருக்கிறோம் என்கிற நம்பிக்கை நமக்கு உண்டாகும். மகா பெரிய தேவன் நம்மீது அன்பு கூர்ந்தபடியால், தம்மை தாழ்த்தி நம்மை போல மனிதனாய், குமாரனாய் வந்து, தமது இரத்தம் சிந்தி நம்மை இரட்சிக்கிறார். மண்ணான நம்மை விலையேற பெற்றவர்களாய், நித்திய ஜீவனுக்கு பாத்திரராய் மாற்றியிருக்கிறார். அவர் கையில் இருக்கும் போது, நமக்கு பயம் தேவையில்லை, இளைபாறுதல் உண்டு, சமாதானம் உண்டு எல்லாவற்றிற்கும் மேலான நித்திய நித்திய காலமாய் அவரோடு வாழ்வோம், என்கிற நம்பிக்கை உண்டு,

" அப்படிப்பட்ட" நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள் – சங்– 95:6

தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது இதுதான் அவருக்கு முன்பாக வந்து , அவரை ஆராதனை செய்ய வேண்டும். நமக்கு எல்லாவற்றையும் செய்து முடித்த ஆண்டவருக்கு முன்பாக நம்மை தாழ்த்தி அவரே மகா தேவன் என்று சொல்லி பணிந்து கொள்வோம். அவருடைய கையில் பாதுகாப்பாக இருப்பதை நினைத்து துதிப்போம். ஆமென்.

அவருக்கே மகிமையுண்டாவதாக

தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

R. ரவிச்சந்திரன்

## பவுலின் நிருப பிரதி

கிபி 3 ஆம் நூற்றாண்டை சேர்ந்த பாபிரஸ் ஓலையில் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட பிலிப்பியருக்கு பவுல் எழுதிய நிரூபத்தின் ஒரு பகுதி அதாவது (பிலி 4:2–12) வசனங்கள் வரையுள்ளது) கண்டெடுக்கபட்டுள்ளது. இது ஒரு உண்மை நகல். இவை பவுலின் நிருபங்களை ஒன்று சேர்தெழுத சேர்க்கப்பட்ட பழங்கால சுவடுகளின் தொகுப்பில் இருந்தது. அவரது அனைத்து நிருபங்களும் பல்வேறு வகையில் ஒன்று சேர்க்கபட்டு, மூல பிரதிகளின் பகுதிகளாயும், நகல்களாயும் வைக்கபட்டுள்ளன. எத்தனை நூற்றாண்டுகளானாலும் கம்பியூட்டர் காலத்தில் வாழும் நமக்கு எழும் சந்தேகங்களை தீர்க்க இத்தகைய பழங்கால பகுதிகள் நமது வேதம் பத்தரைமாற்று பரிசுத்த வார்த்தைகள் என்பதை பறை சாற்றுகின்றன . (வேதம் ஒலிக்கட்டும் விவாதங்கள் ஒழியட்டும் ! அல்லேலூயா)

2015 ஆம் ஆண்டின் சபையின் வாக்குத்தத்தம்

**.......நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்.**

**(ஆமோஸ் 5:14)**

## தேவ செய்தி

### விதையுங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவர் இயேசுவின் ஈடு இணையற்ற நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாத இதழ் மூலமாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் இயேசுவின் நாமத்தில் மகிழ்ச்சி அடைகிறேன். இப்பொழுதும் வேத வசனத்தை விதைப்பதை குறித்து 4 தலைப்புகளில் ஆராயும்படியாக தியானிக்க போகிறோம் கர்த்தர் கிருபை செய்வாராக!

பேதுரு 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.

தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே ஜெநிபிக்கபட்டவர்களே விசுவசி.

இந்த விசுவாசி எப்படிபட்டவன் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். (1 பேதுரு – 1:13) மனதை அலைய விடாமல் தெளிந்த புத்தியுள்ளவன்,இயேசு ராஜாவின் இரண்டாம் வருகையில் அளிக்கப்படும் கிருபையில் பூரண நம்பிக்கையுள்ளவன். நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின் படியே இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து,( 1 பேதுரு 1 :14)கீழ்படிதலுடன் தன் நடத்தையில் எல்லாம் பரிசுத்தமுள்ளவன். இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்.( 1 பேதுரு.1:17) நீதிபதியாகிய இயேசு ராஜாவை பற்றும் பயத்தினால் பரதேசிகள் வாழும் இவ்வுலகத்தில் வாழ்கிறவன். நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாய் இருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஊக்கமாய் அன்புகூருங்கள்; ( 1பேதுரு 1:22) மாயமற்ற சகோதர சிநேகம் உடையவன், சத்தியத்திற்கு கீழ்படிந்து தன் இருதயத்தை சுத்தமாக்கி கொண்டவன் சுத்த உள்ளத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுகிறவன், இயேசு ராஜாவின் விலையேற பெற்ற இரத்தத்ததினால் மீட்கப்பட்டு ஒரு விசுவாசி மறுபடியும் பிறக்கிறான். இப்படிபட்ட விசுவாசிதான் மறு ஜென்மம் அடைந்தது போல மற்றவர்களும் மறுஜென்மம் அடைய அழிவில்லாத வித்தை மக்களிடம் விதைக்க வேண்டும்.

### விதையுங்கள்.

<u>முதலாவதாக எதை விதைக்கவேண்டும்.?</u>

அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுது கொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான். சங்கீதம் 126:6 ல் வாசிக்கிறோம் அள்ளி தூவும் விதையாக பல வசனங்களை விதைக்க வேண்டும். ஒரே வசனம் பலரிடம் ஒன்றாக விளையாது. ஒவ்வொருவர் வாழ்க்கையை குறிப்பிட்ட வசனம் கிரியை செய்யும் இந்த வசனம் அவர்களை மாற்றும். ஆகையால் வசனங்களை நாம் அள்ளி தூவிக்கொண்டே செல்ல வேண்டும் அது அவரை நம்புகிறவர்கள் வாழ்க்கையில் கிரியை செய்து கொண்டே செல்லும்

## இரண்டாவதாக எப்படி விதைக்க வேண்டும்.?

கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.சங்கீதம் 126:5. கண்ணீரோடு விதைக்க வேண்டும். அநேக உபவத்திரங்கள் வழியாக செல்லும்படியாக கண்ணீரோடு ஜெபித்து விதைக்க வேண்டும். பாரத்தோடு சாட்சியோடு அன்போடு விதைக்க வேண்டும்.

## மூன்றாவதாக எங்கு விதைக்க வேண்டும்?

மாடுகளையும் கழுதைகளையும் நடத்திக்கொண்டு போய், நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்.(ஏசாயா 32:20) நீர்வளமுள்ள இடங்களில் விதைக்க வேண்டும் மக்களை வளமுள்ள நிலங்களாக மாற்றி விதையை விதைக்க வேண்டும். இது விதை விதைப்பவனின் கடமையாகும். நீர்வளமில்லாத நிலத்தில் விதைப்பதால் எந்த பயனும் இல்லை.. நிலத்தை பண்படுத்தி நீர் வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

## கடைசியாக எப்பொழுது விதைக்கவேண்டும்?

காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே; அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே(பிரசங்கி 11:6) காலையிலும் மாலையிலும் விதைக்க வேண்டும். அழிவில்லாத வித்தாகிய தேவ வசனத்தை வளம் பொருந்திய இடத்தில் காலையும் மாலையும், விதைப்போமாக.

கர்த்தருக்கு பிரியமான சகோதரனே, சகோதரியே, வேத வசனத்தின் படி நாமும் வசனத்தை என்கிற விதையை விதைப்போம், அது நல்ல நிலத்தில் விழுந்த விதையாக முளைத்து முற்களினாலோ, களையினாலோ, நெருக்கப்படாமல், பாறையில் விதைக்கபட்டது போல வேறுன்றாமல் அல்ல, நன்கு வேறுன்றி கர்த்தருக்கு நிலைத்திருக்க வசனம் என்கிற விதையை விதைத்து கர்த்தருக்கென்று ஆத்துமாக்களை அறுவடை செய்வோம்

கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் அவ்விதமே எடுத்து பயன்படுத்துவாராக

கர்த்தர் நம்மை காக்ககடவர். அவர் சமூகம் நம்மோடு இருப்பதாக

ஆமென்.!

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரர் .அசோக்குமார் .

## நயாகரா பய(ண)ம்

பிரான்ஸ் நாட்டின் சார்லஸ் புளோன்டின் "பயமில்லாத மனிதன்" என்று வர்ணிக்கப்படுகிறார். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், பல ஆபத்தான சாகசங்களைச் செய்துள்ளார்.

1859 ஆண்டு சார்லஸ் புளோன்டின் பத்திரிக்கைகளின் தலைப்பு செய்திகளில் பரபரப்பாக அடிபட்டார். அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் குறுக்கே உள்ள நயாகரா நீர்வீழ்ச்சியின் 150 அடி உயரத்திற்கு மேல் 975 அடி நீளத்தில் கயிறு ஒன்றை கட்டினார் . பேரிரைச்சலுடன் ஓடி கொண்டிருந்த நீர்வீழ்ச்சியின் மேலாக கயிற்றின் ஒரு நுனி பகுதியில் இருந்து மற்றொறு முனை பகுதிக்கு கொஞசம் கூட பயமில்லாமல் கயிற்றின் மேல் நடக்க ஆரம்பித்தார். இதய துடிப்பே நின்று விடும் அளவிற்கு கயிற்றின் மீது நடக்க மட்டும் செய்யவில்லை, பல சாகசங்களையும் செய்து காண்பித்தார். கனடாவின் நயாகரா பகுதியில் கயிற்றின் மீத நடந்த போது திடீரென்று கயிற்றில் படுத்த கொண்டார். ஒரு முறை பின்பக்கமாக குட்டி கரணமும் அடித்தார்.

அமெரிக்கா பகுதி நயாகராவின் மீது நடந்த போது உடன் ஒரு நாற்காலியும் எடுத்து சென்றார். கயிற்றின் மீது நாற்காலியின் இரண்டு கால்களை மட்டும் நிற்க வைத்து அதில் புளோன்டின் உட்கார்ந்தும் காட்டினார். பேலன்ஸ் நூலிழை தவறினால் கூட புளோன்டின் நீர்வீழ்ச்சியில் விழுந்து சாக வேண்டியதுதான்.

மறுவருடம் புளோன்டின் கண்களை கட்டிக்கொண்டு நயாகராவின் மீது நடந்து சாதனை ெய்தார். இன்னொரு சமயம் நயாகராவில் பினோக்கி நடந்து சாதனை செய்தார். சில சமயங்களில் தன் முதுகில் ஒருவரை தூக்கி கொண்டு கயிற்றின் மீது நடக்கும் போது உடன் சென்றவர் பயந்து நடுநடுங்க ஆரம்பித்துவிட்டார். அப்போது அவரிடம் புளோன்டின், நீங்கள் பேசாமல் என்மிது உட்கார்ந்து வாருங்கள், இலலையென்றால் உங்களை கிழே போட்டுவிடுவேன் என்றார். அதன் பிறகு புளோன்டின் முதுகில் சவாரி செய்தவர் கப்சிப் ஆனார்.

விசுவாச வார்த்தையில் கர்த்தரோடு நடப்பதும் இப்படிபட்ட சாகசமான செயல்தான். தேவனோடு நடந்து அக்கரை சேர வேண்டும் என்றால் தேவன் மேல் சார்ந்து கொள்வதை தவிர வேறெதை செய்தாலும் அவரை அக்கரை செல்ல முடியாமல் தடுக்கும் செயலாவே மாறும், சிலசமயங்களில் அவர் நம்மை கீழே போட்டுவிடுவேன் என்று மிரட்டவும் செய்வார். அதற்கு கீழ்படியாதவர்களை கீழே போடுவதை தவிர வேறு வழியில்லை . அவரோடு சேர்ந்து நாமும் "அக்கரை செல்லும்" ரகசியத்தை அறிந்தால் " சும்மா இருந்தாலே போதும்" என்பதை அறிந்திருப்போம். அதுதான் நம்மால் முடிகிறதில்லை அவரது நடையும் தடைபடுகிறது தாமதிக்கிறது! புரிந்தவர்களாவது போராடாமல் சும்மா இருங்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள். நீங்களோ சும்மா இருங்கள் கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார் (யாத் 14:14) கர்த்தரை செயல்பட செய்து நாம் சும்மா இருக்க கற்றுக்கொள்வோமா?

# கனவும் விஞ்ஞானமும்

மனிதனின் மூளையில் ஒரு பகுதியான ப்ரி குவாண்டல் கார்டெக்ஸ் என்பது வருங்காரியங்களை முன்னதாக காட்டும் கனவுகளை உண்டு பண்ணுகிறதென்ற உண்மையை தற்போது விஞ்ஞானமே ஒத்து கொண்டுள்ளது என்றும் அதனாலேயே சைக்கோதெரபி பெருவாரியான வியாதிகளுக்கு நிவாரணத்தை தருகிறது என்றும் கண்டுபிடித்துள்ளனர்.

கிமு நான்காம் நூற்றாண்டை சேர்ந்த பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கண்ட கனவும் அதற்கு தானியேல் சொன்ன அர்த்தமும் நிகரற்ற சரித்திரமாகும். அதை எவறும் அர்த்தமற்றது என்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில் ராஜா கண்ட கனவில் உலக சரித்திரத்தில் வரும் அத்தனை சாம்ராஜ்யங்களின் சரித்திரமும் வருகிறதே. முதலாவது பாபிலோனின் சாம்ராஜ்யம் (பொன்னால்லான தலை) பிறகு மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் (வெள்ளியாலான மார்பும் பயங்களும்) பிறகு கிரேக்க சாம்ராஜ்யம் ( வெண்கலத்தான வயிறும் தொடையும்)அதன் பின்பு ரோம சாம்ராஜ்யம் (இரும்பாலான கால்கள்) கடைசியாக (இரும்புமும் களிமண்ணும் சேர்ந்த) ஜனநாயக அரசு என்று உலக சரித்திரத்தை கூறு போட்டு காட்டிய கனவு சாதாரணமானதல்ல .

சுமார் 2500 வருட உலக சரித்திரத்தை முன்னறிவித்த காரியம், ஒருக்காலம் மனுஷனுடைய புத்திக்கோ யோசனைக்கோ ஏற்றதல்ல. நேபுகாத் நேச்சார் சொப்பனம் கண்ட போது கிரேக்க ராஜ்யமோ, ரோம ராஜ்யமோ, பெயருக்கு கூட இருக்கவில்லை, இப்படி இருக்க 2000 வருடத்திய உலக சாம்ராஜ்யங்களை பற்றி கூறியது எழுத்தின்படியே எப்படி நிறைவேறி வருகிறது? இது மட்டுமா, இந்த ராஜ்யங்களின் முடிவில் அதாவது கனவில் கண்ட சிலையின் பாதத்தில் மோதிய கல் ஒன்று தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியும் சொல்லியுள்ளதையும் பார்க்கும் போது மற்ற சாம்ராஜ்யங்களின் தோற்றம் எப்படி எழுத்தின்படி நிறைவேறியதோ அப்படியே தேவனுடைய ராஜ்யத்தை பற்றி சொல்வதும் நிறைவேறித்தானே தீரும் .

வானத்தின் கீழ் எங்கும் இருக்கும் ராஜ்யங்களின் நாகரீகமும் ஆளுகையும், மகத்துவமும், உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்கு கொடுக்கப்படும், அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம், சகல கர்த்தத்துவமும் அவரை சேவித்து, அவருக்கு கீழ்படிந்திருக்கும், என்று சொல்லபட்ட வார்தை நிறைவேறித்தான் ஆக வேண்டும். தானியலின் காலத்தில் இல்லாத மேதிய பெர்சயா அரசு வல்லரசானதும், கிரேக்க ராஜ்யம் தோன்றினதும், ரோம ராஜ்யம் எழும்பினதும், சரித்திர உண்மையானால், உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்கள் ஆள போகும் தேவ ராஜ்யமும் வந்துதானே ஆக வேண்டும்.? நேபுகாத்நேச்சாரின் கனவில் 90 சதவிகிதம் நிறைவேறி மீதம் 10 சதவிகிதம் நிறைவேறாமல் போகுமா? தேவன் இனிமேல் சம்பவிக்க போகிறவைகளை நேபுகாத் நேச்சாருக்கு காண்பித்தார். அதன் அர்த்தத்தை தமது ஆவியை பெற்ற தனது தாசனாகிய தானியேலுக்கு வெளிபடுத்தினார். இதுவே உலக சரித்திரம். இந்த உலகை வரலாற்றோடு கனவும் இணைந்திருக்கிற உண்மையயை யார் மறுத்துறைக்க முடியும். கனவு விஞ்ஞான பூர்வமான உண்மை .

(மீண்டும் சந்திப்போம் ...இப்போது சிந்திப்போம்.)

# சர்வாதிகாரிகளின் கடைசி காலம்

சர்வாதிகாரிகளின் கடைசி காலம் மிகவும் கொடூரமாக இருக்கும் .இதற்கு சமீபத்திய உதாரணம் லிபியா அதிபர் கடாபி. சர்வாதிகாரி என்றாலே ஹிட்லர், முசோலினி இல்லாமல் முழுமை பெறாது. இவர்களின் இறுதிகாலம் எப்படி இருந்தது? இரண்டாம் உலக போரில் ஹிட்லரின் தோளோடு தோள் நின்று உதவிய தோழன் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி போரில் தோற்ற பிறகு ஒரு வேனில் ஏறி எல்லையை கடந்து தப்பி செல்ல முயன்றார். கூடவே தனது இணை பிரியா காதலி கிளாரா பெட்டாசியையும் அழைத்து சென்றார்.

1945 ஏப்ரல் மாதம் 26 ஆம் தேதி அதிகாலையில் எல்லையை கடக்க முயன்ற போது அவர்களை புரட்சிபடை தடுத்து நிறுத்தியது. முசோலினியை அடையாளம் கண்டு கொண்டு காதலியோடு சேர்த்து அவரை கீழே இறக்கினார்கள். இவனை கைது செய்து நேச நாடுகளிடம் ஒப்படைத்துவிடலாம் என்று சிலர் சொன்னார்கள், இல்லை இங்கேயே தீர்த்து கட்டலாம் என்று பெரும்பாலோர் கூறினார்கள். முடிவு நெருங்கி விட்டதை உணர்ந்த முசோலினி அவர்கள் முன் மண்டியிட்டு என்னை கொல்லாதீர்கள் .. என்று கெஞ்சி கதறினார். எப்படிபட்ட சர்வாதிகரிக்கும் உயிர் பயம் இருக்கும் என்று நினைக்கிறேன். முசோலினியன் முழங்காற்சட்டை அவனுடைய பயத்தால் நனைந்திருந்தது.

எதிரே நின்ற இளைஞர்கள் முசோலினியையும் அவர் காதலியையும் சல்லடையாக துளைத்தெடுத்தார்கள். அவர்களது உடலை மிலான் நகரின் நடு வீதியில் போட்டார்கள். ஒரு சாதாரணமான சமானிய பெண் முசோலினியின் முகத்தில் காரி உழிந்தாள். பிறகு நிறைய பெண்கள் வந்து அவன் முகத்தில் காரி உமிழ்தார்கள், இளைஞர்கள் முசோலினியின் பிரேதத்தை சுற்றி நின்று அதன் மேல் சிறு நீர் கழித்தார்கள். பின்பு ஒரு பெட்ரோல் வங்கியின் முகப்பில் தலைகீழாக தொங்கவிட்டு போய்விட்டார்கள் .

முசோலினியின் கொடுமையான முடிவு ஹிட்டலருக்கு தெரிய வந்தது. அப்பொழுதே அவர் உடல் நடுங்கியது, இந்த கொடூர முடிவு எனக்கு வரக்கூடாது நான் இறந்த உடன் என் உடலை எரித்துவிடுங்கள். என் சாம்பல் கூட எதிரிகளின் கையில் கிடைத்துவிட கூடாது என்று சத்தியம் செய்து கொடுங்கள் என்று தன் உதவியாளர்களிடம் சத்தியம் வாங்கி கொண்டான். அப்போதே அவரது இறுதி நேரம் நெருங்கி இருந்தது. ஹிட்லர் எதாவது ஒரு அரபு நாட்டிற்கு தப்பி போயிருக்கலாம், யூதர்களை கொன்றதால் அரபு நாடுகள் இவரை வரவேற்றிருக்கும் , ஆனால் ஹிட்லருக்கு கடைசிவரை அந்த எண்ணம் வரவில்லை.

எந்த விளைவுகளையும் சந்திக்கும் துணிவு ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டும். நான் வாழ்ந்த இடம் இது. இங்கேயே என் முடிவை சந்திக்க போகிறேன். நாளை கோடிகணக்கான மக்கள் என்னை சபிக்க போகிறார்கள் என்பது எனக்கு தெரியும்.விதிஅப்படி ஒரு நிலைமையை எனக்கு தந்துவிட்டது என்று சொன்னார் ஹிட்லர். தனது காதலி ஈவாபிரானுடன் கை கோர்த்தவாறு உள் அறைக்கு நடந்தார் . இருவரும் சோபாவில் அமர்ந்தனர் ஈவா முதலில் சயனைட் விழுங்கி தற்கொலை செய்து கொண்டார். அதன் பின் ஹிட்லர் தன் கை துப்பாக்கியை எடுத்து தனது வலது நெற்றி பொட்டில் வைத்து சுட்டு தற்கொலை செய்து கொண்டார். ஹிட்லரின் விருப்பப்படி அவர்களின் உடல் பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டது . உடலின் சாம்பலை சிறு கோணிபையில் சேகரித்து மண்ணை ஆழமாக நோண்டி புதைத்தார்கள். சாம்பல் கூட எதிரிகளுக்கு கிடைக்கவில்லை . ஹிட்லரின் விருப்பப்படிதான் அவர் மரணமும் நிகழ்ந்தது.

முடியாண்ட மன்னரும் இறுதியில் பிடி சாம்பல் ஆவர்! என்பது சர்வாதிகாரத்தை விரும்புவோருக்கு புரிந்தால் நல்லது. மரணம் வரும் நேரத்தில் புரிந்து என்ன பயன்.?

# 2015 – ஜூன் மாத விடைகள்

1. இயேசு – லூக்கா 3: 21 – 2. இயேசு – லூக்கா 18: 1

3. இயேசு – லூக்கா 19: 10 – 4. நாயீன் ஊர் விதவையின் மகன் – லூக்கா 7: 11,15

5. லாசரு – லூக்கா 16: 20,21 – 6. சிமியோன் – லூக்கா 2: 29

7. இயேசு – லூக்கா 4: 46 – 8. லூக்கா 1: 31ல்

9. மார்த்தாள் – லூக்கா 10: 40 – 10. தேவதூதன் – லூக்கா 1: 37

11. பானுவேல் – லூக்கா 2: 36,37 – 12. இளைய குமாரன் – லூக்கா 15: 18,21

13. இளைய குமாரன் – லூக்கா 15: 20 – 14. சீஷர்கள் – லூக்கா 24: 30,31

15. லாசரு – லூக்கா 16: 22, 23

## 2015 ஜூன் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சாந்தி
Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. செலின் டேவிட்
Sis. டெய்ஸி எபிநேசர்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. மெர்சிலின் தயா இயேசு ரெத்தினம்

Bro. நயோமி ராமர்
Bro. ஜாண்ஸன்
Bro. ஜாண்
Bro. கிறிஸ்டோபர் M

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு நீங்கள் நன்கு வாத்திய கருவிகள் இசைக்கக்கூடிய தாளந்து உள்ளவர்களா, நன்கு பாடக்கூடிய தாளந்து உள்ளவர்களா. அப்படியானால் நீங்கள் உடனே சபையின் பாடகற்குழு பொருப்பாளர் சகோரதரர் இயேசு ரெத்தினம் அவர்களை அணுகவும்

ஊழிய வாஞ்சை உள்ள சகோரர்களா நீங்கள் சபையின் கேம்ப் ஊழிய பொருப்பாளர் சகோதரர். சுகுமார் அவர்களை அணுகவும் .

நன்றி

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. அஃபியா ஆரோக்கியதாஸ்
செல்வி. ஜியோனா செல்வசிங்
செல்வி. ஷேரன் செல்வராஜ்
செல்வி. ஜோஸ்பின் அந்தோனிசாமி
செல்வி. ஹர்ஸிதா வெங்கடேஷ்
செல்வி. ஜெனிற்றா விசு
செல்வி. லீனா வில்கின்ஸ்

செல்வன். ஜோசப் பிரின்ஸ் ஜெகநாதன்
செல்வன். ஏனோக் மார்க் ஆன்றனி
செல்வன். டெலின் ஜெர்வின் ஃபிராங்கிளின்
செல்வன். ஆல்வின் தம்புகுமார்
செல்வன். சஃப்ரின் திமோத்தி சிவகுமார்
செல்வன். சதீஸ் ஜெயச்சந்திரன்
செல்வன். மோனித்ராஜ் வெங்கடேஷ்
செல்வன். சைமன் ஜெயக்குமார்

சகோதரி. ரெஜினா ராமமூர்த்தி
சகோதரி. பெல்வியா ஜெரின்
சகோதரி. மேகலா ஆஸ்டின்
சகோதரி. ஏஞ்சலீனா மணிராஜ்

சகோதரி. ராதா இவாஞ்சலின்
சகோதரி. பவானி ஆரோக்கியராஜ்
சகோதரி. விக்டோரியா ஜோசப் ஜாண்
சகோதரி. ஜெபராணி தர்மர்
சகோதரி. கிறிஸ்டி டேனியேல்
சகோதரி. சாந்தி ஜெயசேகர்
சகோதரி. ஹெப்சிபா சேம் ஆனந்த்
சகோதரி. பாக்கிய சுந்தரி செல்வம்

சகோ. ஶ்ரீதர்
சகோ. ஜோசப் ஜாண்
சகோ. சத்தியநாதன்
சகோ. தாமஸ்
சகோ. தாஸ்செல்வம்
சகோ. சதீஸ்குமார் எத்திராஜ்
சகோ. தாஸ்
சகோ. ஸ்டாலின்
சகோ. கபிலன் பால் புருஷோத்தமன்
சகோ. அசோக்குமார்
சகோ. ஸ்டீபன் ஜெயக்குமார்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி / திரு. சாமுவேல் ஜாண்சன்
திருமதி / திரு. பக்தராஜ்
திருமதி / திரு. ஜோன்ஸ் செல்வசிங்
திருமதி / திரு. அசோக்குமார்
திருமதி / திரு. முத்தையா
திருமதி / திரு. சதீஷ்குமார்
திருமதி / திரு. ஜெஸ்டின்
திருமதி / திரு. வர்க்கீஸ்
திருமதி / திரு. ரிச்சர்ட்சன் டேனியேல்
திருமதி / திரு. தாஸ் செல்வம்
திருமதி / திரு. /பிரட்ரிக் செல்வராஜ்

# 2015 ஜுலை மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/07/2015 | சகோ.ஆராக்கியதாஸ் | சகோ.ஸ்டாலின் |
| 12/07/2015 | சகோ. ஐசக் துரை | சகோ. தாமஸ் |
| 19/07/2015 | சகோ.டேவிட் குமார் | சகோ.ஆராக்கியதாஸ் |
| 26/07/2015 | சகோ. ஜெயசேகர் | சகோ. கிறிஸ்டோபர் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:30 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/07/2015 | சகோ. எபிநேசர் | சகோ. ஜெயசேகர் |
| 10/07/2015 | சகோ. வில்ஸன் | சகோ. சாமுவேல்தாசையா |
| 17/07/2015 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24/07/201 | சகோ. ஜெயசேகர் | சகோ. ஸ்டீ.்.பன் |
| 31/07/2015 | குடும்ப ஆராதனை<br>சகோ. அற்புத ராஜ் | சகோ. ஐசக் துரை |

09/07/2015 முழு இரவு ஜெபம் இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை
இடம் : பரிசுத்த பவுல் ஆலயம் (அஹமதி )

(31/07/2015 அன்று வாலிப ஐக்கிய கூடுகை மாலை 7 மணிக்கு
இடம் : புதிய ஜெப வீடு (பாஹூல்)

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
**நாள் – இடம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்**

# 2015 ஜுலை மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. திவ்விய சவுந்தர்யமுள்ளவனாயிருந்தவன் யார்?

2. எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தவன் யார்?

3. ஒருமனப்பட்டு ஜெபத்தில் தரித்திருந்தவர்கள் யார்?

4. மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்களைபற்றி வாசிப்பதெங்கே ?

5. வேதாமங்களில் வல்லவன் எனப்பட்டது யார்?

6. கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் அவர்கள் யார் ?

7. யாருடைய முகம் தேவதூதன் முகம் போலிருந்தது?

8. சகல பட்டினங்களிலும் சுவிஷேசத்தை பிரசங்கித்துக் கொண்டு வந்தவர் யார் ?

9. அந்தியோகியாவிலே சஞ்சரித்து, கர்த்தருடைய வசனத்தை உபதேசித்து பிரசங்கித்து கொண்டிருந்த இருவர் யார் ?

10. தகப்பன் கிரேக்கன், தாய் யூதஸ்திரி, இவர்களுக்கு பிறந்த மகன் யார்?

11. இரத்தாம்பரம் விற்று வந்த ஒரு ஸ்திரி யார்?

12. பவுலை வாயில் அடியுங்கள் என்று சொன்ன பிரதான ஆசாரியன் யார்?

13. தன் வீட்டாரோடு இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட ஜெபாலயத் தலைவன் யார்?

14. நியாசனத்துக்கு முன்பாக அடிபட்ட ஜெபாலாயத் தலைவன் யார்?

15. கிறிஸ்துவின் சீஷர்களை ஜெப ஆலயங்களில் வைத்து அடித்தவன் யார்?

**விடைகளை வருகின்ற 24-7-2015க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்தி மலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு சபை ஊழியங்களை காணிக்கைகளால் தாங்குபவர்கள் இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியங்களுக்கு தங்களது காணிக்கைகளை சகோதரர் ஆரோக்கிதாஸ் அவர்களிடத்திலும், திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களுக்கு சகோ. எபிநேசர் அவர்களிடத்திலும் , சபை போக்குவரத்து ஊழியங்களுக்கு காணிக்கைளை சகோ. வில்ஸன் அவர்களிடத்திலும் கொடுத்து ஊழியங்களை தாங்கவும்

Praise the Lord

## ஞானமும் தேவ பெலனும்

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையை கவனித்து பார்ப்பீரகளானால்,அவரே ஞானமாயிருந்தாலும் (I யோவான் 7:15) வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சர்யபட்டார்கள். ஒவ்வொரு நாளும் பிதாவை நோக்கி ஜெபித்தார்கள்.

கர்த்தருக்கு பயப்படுதல் என்பது இயேசுவுக்கு உகந்த வாசனையாய் இருந்தது. பரிசுத்தாவியினால் எப்போழுதும் நிறைந்திருந்தார். எனவே இயேசு கிறிஸ்துவை குறித்து (லூக்கா 2:52) வாசிக்கிறோம். இயேசுவானவர் ஞானத்திலும், தேவ கிருபையிலும், மனுஷர்தயவிலும், அதிகமாய் விருத்தியடைந்தார்.

பிரியமான வாலிப தங்கையே, தம்பியே, ஒரு வாலிபன் எல்லாவகையிலும் சிறந்து விளங்கக்கூடியவன் எந்த துறையை எடுத்துக் கொண்டாலும் அவனுக்கு அத்துப்படி எதைகேட்டாலும் விரல்நுனியில் பதில் வைத்துக்கொண்டிருப்பார், ஆனால் படிப்பு அல்லது சப்ஜெட் என்று எடுத்துக் கொண்டால் Zero ஆனால் அவன் ஆண்டவரை தன் வாழ்க்கையில் Heroவாக ஏற்றுக் கொண்டார், பின்னர் என்ன? சொல்ல வேண்டுமா அவர் வாழ்க்கையில் அவருக்கு என்ன தேவையோ ஆண்டவர் அதை அவருக்கு கொடுத்தார். அவருக்கு பயப்படும்படி நம்மிடத்தில் கீழ்படிதல் உண்டா? அல்லது அவரது வார்த்தைகளுக்கு நாம் செவி கொடுக்கிறோமா? அவரை சொந்த இரட்சகராக நாம் ஏற்றுக் கொண்டபின்னும் உலகத்திற்காக நாம் வாழ்கிறோமா? அல்லது அவருக்காக நாம் வாழ்கிறோமா? இயேசுவை நாம் ஏற்றுக் கொண்டபின் நம்வாழ்க்கையில் எதாவது மாற்றம் உண்டா? எல்லாம் நமக்கு தானாக வரும் ஆனால் ஞானம் அவருக்கு பயப்படும் பொழுது மாத்திரமே வரும்.ஆண்டவரை ஏற்றுக் கொண்ட பின்னும் கூட ஞான இல்லாமல் காரியங்களை செய்கிறோம் நம்மை குறித்து மற்றவர் என்ன பேசுவார்கள் என்பதை கூட சில நேரங்களில் நாம் மறந்து சில காரியங்களை செய்து கொண்டிருக்கிறோம். எவ்வளவு ஒரு வேதனைக்குறிய காரியம். சகோதரனே நமக்கு வேதத்தின் ஞானம் வேண்டும். அதுவே நம்மை குருடாக்கிவிடாதபடி நமக்குள் விழிப்பு வேண்டும் (SpritualBlind) என்று சொல்லுவார்கள். நமக்கு கொடுத்திருக்கும் வரம் என்ன என்பதை பகுத்தரிய வேண்டும். எல்லாம் என்னால் கூடும் என்கிற ஆணவத்தை ஆண்டவர் வெறுக்கிறார். நம்முடைய தாலந்து என்ன என்பதை உணர்ந்தவர்களாக நாம் செயல்படும் போது நாம் நமக்கு ஆண்டவர் கொடுத்த தாலந்தை ஆண்டவருடைய நாம மகிமைக்கென்று நேர்த்தியாக ஆண்டவருக்கு செலுத்தும் போது ஆண்டவரும் மகிழுவார். ஆண்டவருடைய நாமமும் மகிமைபடும். ஆண்டவரை அறியாதபுறஜாதியார்கள் (அன்னிய தேவர்களை வணங்கக்கூடியவர்கள்) கூட அவர்களுடைய தேவர்களை நேர்த்தியாய் வணங்குவதை பார்க்கலாம்.

பிரியமான சகோதரனே சகோதரியே நாம் வணங்கக் கூடிய தேவன் ஜீவிக்கிற தேவன் நேற்றும் இன்றும் மாறாதவாராக, மரித்தேன் ஆனாலும் சதா காலங்களிலும் உங்களுடனே இருக்கிறேன் என்று சொன்ன ஆண்டவர், நமக்காக ஜீவ பலியாக கோர சிலுவையிலே தன்னை ஒப்பு கொடுத்தவர். அப்படிப்பட்ட ஆண்டவரை நாம் ஆராதிக்கிறோம். அந்த ஆண்டவரை ஏனோ தானோ என்று நாம் தொழுவது எப்படிபட்ட ஒரு தவறை நாம் செய்கிறோம் என்பதை உணர வேண்டும், வாலிபம் என்பது பலவானுடைய அம்புக்கு ஒப்பாக வேதம் கூறுகிறது அப்படியானால் நமக்கு இருக்கும் பெலன் எதிலே வெளிப்பட வேண்டும் விதண்டா வாதம் பேசுவதிலா? அல்லது மற்றவர்களுக்காக பரிந்து பேசி சச்சரவை உண்டாக்குவதிலா? அல்லது சகோதரனே சகோதரியே ஆண்டவருடைய வசனத்தை உபதேசிப்பதில், ஆண்டவருக்கு ஆராதனை செய்வதில், ஆண்டவருக்கென்று ஒரு சேனையை உருவாக்குவதில், என்று இப்படிபட்ட காரியங்களில் வெளிபடுத்துவோம், எது செய்தாலும் ஆண்டவருக்கு நேர்த்தியாய் செய்வோம். அதற்காக என்ன விலை கொடுத்தாலும் பரவாயில்லை. நாம் நம்முடைய ஆண்டவரின் நாமத்தை மகிமைபடுத்தும் வண்ணமாக (நம்மை வெளிபடுத்தும் வண்ணமாக அல்ல) நேர்த்தியாய் செய்வோம். பலவானுடைய அம்பு என்ன வேகத்தில் செயல்படுமோ! அதே போல வேகமாக செயல்படுவோம். எதை செய்தாலும் ஆண்டவருடைய நாமம் மாத்திரமே மகிமைபடவேண்டும். மேலும் நமக்கு மிகமிக முக்கியமான தேவையான ஒன்று அதுதான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அதை பெற்றுக்கொள்ள நாம் வாஞ்சிக்க வேண்டும். ஏனெனில் வேதம் உரைப்பது என்ன என்று பார்த்தோமானால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான் என்று. ஆண்டவரிடத்தில் கேட்போம் வாஞ்சையோடு கேட்போம் விசுவாசத்தோடு கேட்போம் நிச்சயம் பெற்றுக்கொள்வோம். ஏன் நமக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் வேண்டும். ஆண்டவருடை எந்த ஒரு காரியமானாலும் சரி அதை செய்து முடிக்க நம் சொந்த பெலத்தினால் ஒன்றுமே ஆகாது. வேதத்தில் பார்க்கிறோம் பேதுருவுக்கு ஆண்டவர் அப்படி ஒரு வரத்தை கொடுத்திருந்தார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எல்லோரையும் தொட்டுதான் சுகமாக்கினார், ஆனால் பேதுரு நடந்து செல்லும் பொழுது அவரது நிழல்பட்டு சொஸ்தமானர்கள் என்று வேதம் கூறுகிறது என்ன காரணம், ஆண்டவர் உயிர்தெழுந்த பின் உங்களுக்கு தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவேன் என்று வாக்கு கொடுத்தது மல்லாமல் நம்மோடு கூட இருந்து நமக்கு உதவி செய்ய திருவுளம் பற்றினார். ஆகவே பிரியமான தங்கையே தம்பியே ஞானம் தேவன் தருவது, பெலனும் தேவனால் வருவது, எனவே தேவனுக்கு பயப்படும் பொழுது ஞானம் வரும் தேவனிடத்தில் கேட்கும் பொழுது பெலன் வரும். தேவனுக்கென்று எழுந்து பிரகாசிப்போம் தேவ பெலத்தினால் உங்களை ஆண்டவர் நிரப்புவாராக

ஆமென்

# டாமியன்
## (1840-1889)

இந்த மனிதர் துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினார். பசிபிக் மகாசமுத்திரத்திலுள்ள அழகு மிக்க ஹாவாய் தீவுகள் கூட்டத்தில், "மொலாக்காய்" என்று ஒரு சிறு தீவு. இந்தத் தீவில் வாழ்ந்தவர்கள் அனைவரும் தொழு நோயால் பீடிக்கப்பட்டவர்கள். ஒரு காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் தொழுநோய் வெகுவாய்க் காணப்பட்டது. தெருக்களில் எச்சரிக்கையாய் மணி அடித்துக்கொண்டு செல்லவேண்டும் என்பது கட்டாயம். இந்த மணி ஒலி ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் கேட்கும் அளவுக்கு, எங்கும் பரவலாய்க் காணப்பட்டது. இந்நோய் மேலும் பரவாமல் தடுக்க, ஹவாய் அரசாங்கம் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் 1865-ம் ஆண்டு "மொலாக்காய்" தீவிற்கு அனுப்பி வைத்தது. அங்க அவர்களை கவனிப்பாரின்றி செத்து மடிந்து கொண்டிருந்தார்கள்.

1873-ம் வருடம் "மாய்" என்ற இடத்தில் ஒரு சிற்றாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அச்சமயம் அங்கு குழுமியிருந்த போதகர்களுக்கு, ஹவாய் பிஷப் ஒரு அறைகூவல் விடுத்தார். யார் போவார் மொலாக்காய் தீவிற்கு? என்பதே அந்த அறைகூவல். அத்தீவில் எந்த ஒரு மிஷனெரியும் நீண்ட நாள் பணி செய்ததில்லை. அங்குள்ள தொழுநோயாளிகளைச் சரியான வழியில் நடத்த ஒருவரும் இல்லாததால், அவர்கள் துன்மார்க்க ஜீவியம் செய்து மடிந்து கொண்டிருந்தார்கள். அரசாங்கமோ ஒரு கடுமையான விதியைப் பிறப்பித்திருந்தது. மொலாக்காய் தீவிற்கு போகிறவர்கள் அங்கேயே இருந்து விடவேண்டும். மீண்டும் தாய் நாட்டுக்கு அவர்கள் திரும்பி வரக்கூடாது. அந்தத்தீவிலிருந்து வேறெங்கும் குஷ்டரோகம் பரவக்கூடாது என்பதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. குழுமியிருந்தவர்கள் ஒருவரும் அங்கு செல்ல முன்வரவில்லை.

இறுதியில் ஒருவர் எழுந்து நின்றார். " நான் போகிறேன்" என்று தைரியமாகக் கூறினார். எல்லாரிலும் அதிகம் வயது உடைய போதகர் அவர் மிஷனெரி அனுபவமும் உடையவர். இவர் தனது இயற்பெயரான ஜோசப் டி வெஸ்டா என்ற பெயரை மாற்றி டாமியன் என்று ஒரு பரிசுத்தவானின் பெயரை ஏற்றுக் கொண்டிருந்தார். இவரின் பெற்றோர்கள் விவசாயிகள் தங்கள் மகன் வியாபாரம் செய்து பணம் ஈட்டவேண்டும் என்பது அவர்களின் ஆவல். இவருக்கோ நற்பணியாளராகச் செல்வதிலேயே நாட்டம். தன் 19-ம் வயதில் போதகர் பயிற்சியில் சேர்ந்தார். அதை முடிக்கும் முன்னதாகவே, திருச்சபை அவருடைய ஆர்வத்தைக் கருத்தில்கொண்டு, ஹவாய் தீவிற்கு மிஷனெரியாக அனுப்பி வைத்தது. இவரை அனுப்பும் முன் இவரிடம் மீண்டும் அந்தத் தீவிற்கு போகிறவர் எவராயிருந்தாலும் குஷ்டரோகம் தாக்கி மரிக்க வேண்டியதாயிருக்கும். ஆகவே நன்றாக யோசித்து பதில் சொல்லுங்கள் என்ற போது, டாமியன் தன் தீர்மானத்தில் உறுதியாயிருந்ததினால் ஆடு, மாடுகளை ஏற்றிச் செல்லும் ஒரு படகில் பயணம் செய்து, குஷ்டரோகிகள் வாழும் மொலாக்காய் தீவைச் சென்றடைந்தார். அவருடன் அந்தப் படகில் 50 குஷ்டரோகிகளும் பயணித்தனர்.

மொலாக்காய் தீவில் இறங்கிய டாமியன் அதிர்ச்சியடைந்தார். அங்கிருந்த மக்கள் ஒவ்வொருவரும் சீழ் வடியும் புண்கள் உடையவர்கள். கை, கால் சூம்பினவர்கள் ஆகமொத்தம் 2000 குஷ்டரோகிகள் அந்தத்தீவிற்கு அனுப்பப்பட்டிருந்தனர். டாமியன் காலத்தில் அவர்களின் எண்ணிக்கை 800 ஆக குறைந்தது. யாருக்கும் வீடுகள் கிடையாது. செடி, கொடி இலைகளால் அமைக்கப்பட்ட சிறு சிறு குடிசைகளில் அவர்கள் வாழ்ந்தனர். டாமியனுக்கும் தங்குவதற்கு இடமில்லை. குஷ்டரோகிகள் மத்தியில் பணி செய்ய அவருக்கு விருப்பமிருந்தாலும், அவர்கள் அவருடன் படுத்துறங்குவதை அவர் மனம் விரும்பவில்லை. ஆகவே பல நாட்கள் ஒரு மரத்தடியிலேயே உறங்கி வந்தார். வெகுநாள் கழித்து தனக்கென ஒரு குடிசையை அமைத்தார்.

குஷ்டரோகிகள் அனைவரும் பல்வேறு இடங்களிலிருந்து வந்ததினால் ஒருவருக்கொருவர் அறிமுகமாகாதவர்கள். ஆண்கள், பெண்கள்,குழந்தைகள், இளைஞர், முதியோர் என பலர். அவர்கள் அணிந்திருந்த உடைகள் அழுக்கு நிறைந்ததும், சீழ் வடிந்து நாற்றம் அடிக்கக் கூடியதாகவும் இருந்தன. அவர்களின் சிகிச்சைக்கு மருந்தொன்றும் கிடையாது. அங்கு ஒரு மருத்துவமனை இருந்தது. ஆனால் சிகிச்சைக்கு அங்கு சென்றவர், உயிருடன் மீள்வதில்லை. வாழ்வில் யாருக்கும் நம்பிக்கை இல்லாத சூழ்நிலை. சீட்டு விளையாடுவதிலும், கூட்டமாக நடமாடுவதிலும், போதை மிகுந்த சாராயத்தைக் குடித்து மதிமயங்கி திரிவதிலும் நாட்களைக் கழித்தனர். மரிக்கும் தருவாயில் இருக்கும் பெண்களும், குழந்தைகளும் ஒரு சுவருக்குப் பின் தூக்கி வீசப்பட்டனர். இந்தச் சூழ்நிலையை மாற்ற டாமியன் பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் தொழுநோயாளிகள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரைப் பார்த்து ஆத்திரமடைந்தனர். அதுமட்டுமல்லாமல் டாமியனை அடிக்கவும் தொடங்கினர். ஒரு போதகர் தங்கள் வாழ்வில் குறுக்கிடுவதை அவர்கள் விரும்பவில்லை. இதன் மத்தியிலும் டாமியன் தாக்குப் பிடித்தாரானால், அவரது மன தைரியத்தையும், ஊழிய வாஞ்சையையும் காட்டுகிறது.

டாமியன் தான் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளம் என்று அவர் உணர்ந்தார். பல்வேறு உதவிகளைக் கேட்டு ஹானலுவுக்கு டாமியன் பல கடிதங்கள் எழுதினார். அந்நகர மக்களும் உதவிப் பொருட்களை ஏராளமாய் அனுப்பி வைத்தனர். அதன் மூலம் ஒரு குழுவை அமைத்து வீடுகளை கட்டிக் கொடுத்தார். இறந்தவர்களைப் புதைப்பதிலும் சிரமங்கள் இருந்தன. பெட்டியில் வைத்து அடக்கம் செய்யும் பாக்கியம் ஒரு சிலருக்கே வாய்த்தது. மற்றவர்கள் சிறிது ஆழம் தோண்டி புதைக்கப்பட்டனர். மழை பெய்தவுடன் அச்சடலங்கள் வெளியே தென்பட்டு, துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அநேக சமயங்களில் தானே குழிகளைத் தோண்டினார். சவப் பெட்டிகளையும் செய்ய ஆரம்பித்தார். அதுமட்டுமல்ல இம்மக்களுக்கு நல்ல தண்ணீர் வசதி செய்து கொடுத்தார். இதினால் நீண்ட நாட்களாய் உடுத்திய அழுக்கான துணிகளை துவைக்க முடிந்ததினால் பலருடைய கஷ்டங்களைப் போக்கினார் டாமியன். நல்ல நீர்நிலையைத் தேடி அலைந்து மிகவும் சிரமப்பட்டு ஒரு நீர்த்தடாகத்தை கண்டுபிடித்து தண்ணீர்க் குழாய்களை தரையில் புதைத்து நல்ல தண்ணீரை ஊருக்குள் கொண்டு வந்தார். அதுமட்டுமல்ல கட்டிடங்கள் கட்டுவது, சத்துள்ள ஆகாரம் மக்களுக்க வழங்குவது, மருத்துவமனைக்கு நல்ல மருந்துகள் பெறுவது ஆகிய ஏராளமானவைகளைச் செய்தார்.

மேற்கண்ட பல்வேறு நற்தொண்டுகளை செய்ததோடு டாமியன் ஒவ்வொரு நாளும் ஆராதனை நடத்தி அம்மக்களை நல்வழிப்படுத்தி, ஆவிக்குரிய வாழ்வில் வளர்க்கலானார். பல ஆலயங்களையும், சிற்றாலயங்களையும், அவர்கள் மத்தியில் கட்டி எழுப்பினார். பன்னிரண்டு ஆண்டுகளாக டாமியன் பல்வேறு காரியங்களைச் செய்தார். ஒருநாள் வேலை செய்துகொண்டிருக்கும்போது திடீரென கொதிக்கும் தண்ணீர் முகத்தில் தெறித்தது. ஆனால் முகத்தில் எந்த வலியும் ஏற்படவில்லை. இதுதான் அவரை சிந்திக்க வைத்தது. கொதிக்கும் நீர் முகத்தில் பட்டபோதும் வலியில்லை என்றால், அது ஒருவித குஷ்டரோகத்தின் அடையாளம். டாமியன் தனக்கு குஷ்டரோகம் வந்து விட்டது என்பதை புரிந்துகொண்டார். இதன் மத்தியிலும் மனம் தளராமல் தன் பணியைத் தொடர்ந்தார். நான்கு ஆண்டுகள் கடுமையாக உழைத்தார். அவருக்கு உதவியாக ஒரு உதவியாளர் வந்து சேர்ந்தார். டாமியன் குஷ்டரோகத்தின் கொடுமையால் படுத்தபடுக்கையானார். அவருடைய கைகள் கறுக்க ஆரம்பித்தது. மரணம் சமீபிக்கிறது என்பதை அது சுட்டிக்காட்டியது. மரிக்கும் தருவாயில் கடவுளுக்கு நன்றி கூறினார். அவரது பணியைத் தொடர இரண்டு போதகர்கள் வந்திருந்தனர். மருத்துவ மனையில் ஊழியம் செய்ய சில சகோதரிகளும் வந்து சேர்ந்தனர். தான் ஆரம்பித்த பணி, தொடர்ந்து நடைபெறும் என்ற நம்பிக்கையுடனும், நெஞ்சம் நிறைந்த மகிழ்வுடனும் இறைவன் பாதம் சேர்ந்தார். இவ்வாறான துணிச்சலான வாழ்க்கைக்கு நம்மை அர்ப்பணிக்க முடியுமா?

தொகுப்பு கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர். சுகுமார்

# சகோதரிகள் பகுதி

கர்த்தருடைய பரிசுத்தநாமத்திற்கு, ஸ்தோத்திரமுண்டாவதாக! இச்செய்தி மலரின் வாயிலாக நான் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

## இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்

### பெத்தானியாவிலுள்ள ஒரு ஸ்திரி
### வேதப்பகுதி:(மத்26:6,7,மாற்கு 14:1-9)

பெத்தானியா கிராமம் இயேசு இரட்சகரின் நண்பர்களான மார்த்தாள், மரியாள், லாசரு என்பவர்கள் வசித்து வந்த கிரமமாகும். ஆண்டவர் அடிக்கடி இந்த கிராமத்திற்குப் போய் அங்கு தாங்கினார். நமதாண்டவர் பெத்தானியாவிலே தொழுநோயாளியாய் இருந்த தம்மால் குணம் பெற்ற சீமோன் வீட்டிலே பந்தியில் அமர்ந்து இருக்கிறார். இந்த வேலையில் ஒரு பெண் விலையேறப் பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியை கொண்டு வந்து அதை உடைத்து அந்தத் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள்.

இந்தக் காட்சியைப் பார்த்த சீஷர்கள்.இந்த வீண் செலவு என்னத்திற்கு? இந்த தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஆண்டவர்.சீஷர்களிடம் இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று புகழ்ந்து கூறுகின்றார். ஆண்டவர் தமது சிலுவைப்பாடுகளை அனுபவிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக இந்த பெண் செய்த காரியம் ஆண்டவரை அகமகிழச் செய்தது.

(1) அவள் அப்படி என்னச் செய்தாள்?

தன்னிடத்தில் இருந்த அருமையானதை இயேசுவுக்குக் கொடுத்தாள் அவள் இயேசுவின் தலையில் ஊற்றிய தைலம் உத்தம தைலம்,விலையேறப்பட்ட நளதம் என்று வர்ணிக்கப்படுகிறது.அது வெள்ளைக் கல் பரணியில் வைக்கப்பட்டிருந்தது.ஒரு முறை உடைத்துவிட்டால் திரும்ப அடைக்க முடியாது. அதன் அடைப்பு உடைக்கபடாவிட்டால் பயன்படுத்த முடியாது. அதைக் கிட்டத்தட்ட 300 பணத்திற்கு(ஒரு வருடவருமானம்) விற்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் அந்த ஸ்திரி இதை இயேசுவுக்காய் செலவழிக்க முன்வந்தாள் இயேசு இதை விருப்பமுடன் அங்கீகரித்தார்.இன்று நம்மிடத்தில் அருமையானது எது இருக்கிறது என்று பார்த்து இயேசுவுக்கு கொடுக்க முன் வருவோமா

(2) தடைகளைச் தாண்டிச் சென்று தன்னால் இயன்றதைச் செய்தாள்

அவள் தைலத்தை இயேசுவின் தலையில் ஊற்றியதை அங்கு இருந்தவர்கள் எல்லாரும் அங்கீகரிக்கவில்லை இயேசுவின் சீஷர்கள் கூட இது வீண் செலவு என்றுதான் கருதினார்கள்.ஆனாலும் இந்தப் பெண்ணானவள் தைலத்தை இயேசுவின் தலையில் ஊற்றியே ஆக வேண்டும் என்ற வாஞ்சையோடு கூட, தடைகளை பார்க்காதபடி, தடைகளை நீக்கி போடுகிறவரை பார்த்து முன்சென்று தைலத்தை ஊற்றினாள் நாம் ஆண்டவருக்காக எதாவது செய்யும் போது, பல தடைகள் வரலாம், அவற்றை நாம் மேற்கொள்ள வேண்டும்

**(3)அவள் இயேசுவிடம் நற்கிரியைகளைச் செய்தாள்**

இயேசு அவளைக் குறித்து இவள் என்னிடத்தில் நற்கிரியைகளைச் செய்திருக்கிறாள் என்றார். இயேசுவுக்கு சேவை செய்வது ஒரு நற்கிரியை நன்மை செய்யவும்,தானதர்மம் பண்ணவும் நாம் மறக்கக் கூடாது இப்படிப்பட்ட பலிகளில் தேவன் பிரியமாயிருக்கிறார்(எபி13:16)நற்கிரியை செய்வது ஒரு பலி பழைய ஏற்பாட்டு பக்தர்கள் பல விதமான பலிகளைத் தேவனுக்குக் செலுத்தினார்கள். நாம் தேவனுக்குக் செலுத்தவேண்டிய பலிகள் நம்மையே அர்ப்பணித்து வாழ்வது, தேவனிடத்தில் வைக்கும் விசுவாசம்,ஸ்தோத்திர பலி இடுதல், நன்மைசெய்தல், தானதர்மம் பண்ணுதல் போன்றவைகள்தான் தொற்காள் செய்த நற்கிரியைகள். அவள் மரித்த போதும் பேதுருவால் திரும்பவும் அவள் உயிரோடு எழுப்பப்பட்டாள்(அப்9:39)நம்மால் இயன்ற நற்கிரியையைச் செய்ய எப்போதும் நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்

**(4)சரியான நேரத்தில் செய்தாள் :**

**நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்(மாற்கு14:7)**

அவள் ஏற்ற சமத்தில் செய்தாள் அன்பின் ஆண்டவர் என் சரீரத்தில் தைலம் பூச முந்திக் கொண்டாள் என்று சொல்லுகிறார்.அவள் இன்னொரு சமயம் இந்த பரிமள தைலம் பூசலாம் என்று நினைத்திருந்தால் அந்த நற்சமயம் ஒரு போதும் அவருக்குக் கிடைத்திருக்க மாட்டாது. இதுவே ஆண்டவர் அவள் வீட்டிற்கு வந்த கடைசி சமயம். இது அவளுக்கு தெரியாது. அந்த வாரத்தில் ஆண்டவர் மரிக்கப் போகிறார் என்பதையும் அவள் அறியமாட்டள் என்றாலும், அவர் மீதுள்ள அன்பினால் தனக்கு அருமையாய் வைத்திருந்த தைலத்தை அன்றிரவே அவருக்குப் பூச வேண்டும் என்று நினைத்தாள் நினைத்தபடியே செய்து முடித்தாள்.

நாம் ஆண்டவருக்காக நற்கிரியைகளைச் செய்ய வேண்டும் நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும் செய்வதைக் காலதாமமின்றிச் செய்ய வேண்டும் ஆண்டவர் நம்மை ஆசிர்வதிக்கின்ற அளவுக்கு நாம் அவருடைய ராஜ்ய விருத்திக்காக உழைக்க வேண்டும்.அவர் தந்த காலம், சுகம் பெலன், செல்வம், அறிவு, வரம் அனைத்தையும் மனுமக்களுடைய ஆத்தும நன்மைக்காக உற்சாகமாக செலவிட வேண்டும் இந்தக் கரியத்தில் காலதாமதம் கூடவே கூடாது.

நாம் நற்கிரியைகளைச் செய்ய விரும்பலாம்,இன்னன்ன காரியங்களைச் செய்வதாகத் தீர்மானிக்கலாம். ஆனால் ஏற்ற வேளையில் செய்யாவிட்டால் நமது விருப்பதாலும், தீர்மானங்களாலும் எந்தப் பயனும் இல்லையே! ஆகவே ஆண்டவர் நம்மை கொண்டு செய்ய ஏவுகிற காரியங்களை உடனே செய்வோமாக.

நமது கிரியைகள் இன்று அற்பமானதாகத் தோன்றலாம், தேவ சமுகத்தில் வைக்கப்பட்ட ஆரோனின் உலர்ந்தக் கோலில் கட்ட துளிரும் பூவும் காயும் வரச்செய்த தேவன் அவர், நமது கிரியைகளும், நித்தியத்திற்கான பலனைக் கொடுத்து உதவுவார்

தேவன் தாமே, நாம் ஒவ்வொருவரையும் ஆசீரவதித்து வழிநடத்துவராக

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி. **பியூலா ஜெகநாதன்**

**செல்வி ரேஷ்மா அசோக் குமார்**
**அவர்களின் சாட்சி**



**ஆராதனை வேளையில்**
**சபையின் செயளாலர்**



**உபவாச திருவிருந்து ஆராதனயில்**
**பரிசுத்த பவுல் ஆலயத்தின் சாப்ளின்**
**Rev. ஹாரீஸ் சின்னகுமார் அவர்கள்**
**கலந்து கொண்டு தேவ செய்தி பகிர்ந்தல்**





## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுபபினர்கள்


**தலைவர் – சகோ. ரவிச்சந்திரன்**

23913675 - 66889706

**செயலாளர் – சகோ. ஜெயசேகர்**

23711698 - 96646444

**பொருளாளர்– சகோ. ஆரோக்கியதாஸ்**

99870126

**வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. அற்புதராஜ்**

60692485

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only